24.03.2025 OS.No. 169/2011

சாட்சி : PW 1 **சொக்கலிங்கம்**

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**1, 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

1. நான் எங்க படித்தேன் என்றால் காரைக்குடியில் சில ஆண்டுகளும் பின்னர் சென்னையிலும் படித்தேன். எனது கல்லூரி படிப்பு எங்கு படித்தேன் என்றால் சென்னை ஸ்டான்லி மருத்துவமனையில் படித்தேன். எனது ஆதார், எனக்குள்ள வாக்காளர் அடையாள அட்டை அனைத்தும் சென்னை முகவரியில்தான் உள்ளது என்றால் சரிதான். நான் எந்த ஆண்டுமுதல் காரைக்குடிக்கு வந்து செல்கிறேன் என்றால் சிறு வயது முதல் வந்து செல்கிறேன். நான் வசிக்கும் இடம் சென்னை என்பதால் எனது ஆதார், எனக்குள்ள வாக்காளர் அடையாள அட்டை அனைத்தும் சென்னை முகவரியில் இருந்து வருகிறது.

2. தாவா 1ம் இலக்கச் சொத்து எனது அனுபவத்தில் உள்ளதற்கு ஆதரவாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாவா சொத்து பூர்வீக சொத்து என்பதால் அதற்குரிய ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். அது என்னவென்றால் 1930ம் ஆண்டு கிரையம் செய்ததற்கான பத்திரத்தின் நகல் தாக்கல் செய்துள்ளேன். மேற்கண்ட ஆவணம் என்னால் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் அதனை நான் என் வழக்கறிஞர் வசம் கொடுத்துவிட்டேன். வா.சா.ஆ.1ல் காண்பிக்கப்பட்டுள்ள வம்சாவழி ஜாபிதாவில் 4ம் பிரதிவாதியான எனது தங்கை மீனாள் காண்பிக்கப்படவில்லை என்றால் சரிதான். அவர் பின்னர் தரப்பினராக சேர்க்கப்பட்டுள்ளார் என்றால் சரிதான்.

3. எனது அப்பாவின் அப்பா பெயர் மெய்யப்பன் (எ) சொக்கலிங்கம் செட்டியார் என்றால் சரிதான், எனது தகப்பனாரின் தாயார் பெயர் நாச்சம்மை என்ற சௌந்தரம் என்றால் சரிதான். மெய்யப்பன் (எ) சொக்கலிங்கம் செட்டியாரின் தாயார் பெயர் மெய்யம்மை ஆச்சி (1ம் பிரதிவாதியின் அப்பத்தா) என்றால் சரிதான். அந்த மெய்யம்மை ஆச்சி என்பவரால் தாவா 1ம் இலக்கச் சொத்து பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணத்தின் மூலம் கிரையம் செய்யப்ட்டது என்றால் சரிதான். அந்த கிரையமானது 1930ல் நடந்தது என்றால் சரிதான். என் தாயார் மீனாட்சி ஆச்சி இறந்த பின்பு 1ம் பிரதிவாதி 3ம்

பிரதிவாதியை திருமணம் செய்து கொண்டார் என்றால் சரிதான். 1, 3 பிரதிவாதிகளுக்கு பிறந்த ஆண் மற்றும் பெண் மக்கள் 2 மற்றம் 4 பிரதிவாதிகள் என்றால் சரிதான். சிவகங்கையில் உள்ள வீடு தாவா 2ம் இலக்கச் சொத்து எனது சிறிய தாயார் 3ம் பிரதிவாதியால் பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணம் மூலம் 1985ல் கிரையம் வாங்கப்பட்டது என்றால் சரிதான். சிவகங்கையில் உள்ள 3ம் இலக்கச் சொத்தான கட்டிடம் 2ம் பிரதிவாதியால் 2003ம் வருடம் பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணம் மூலம் கிரையம் பெறப்பட்டது என்றால் சரிதான்.

4. 1ம் இலக்கச் சொத்து கிரையம் வாங்கியது என்று எனக்குத் தெரியாது என்றால் சரிதான், எனக்கும் தெரியாது என் தகப்பனாருக்கும் தெரியாது. எனக்குத் தற்போது என்ன வயது என்றால் 53 வயது ஆகிறது. எனது நிரூபனவாக்குமூலத்தில் 51 என சொல்லியுள்ளேன் என்றால் எனக்கு தற்போதுதான் 53 வயது ஆகிறது. 1985ல் 2ம் இலக்கச் சொத்து வாங்கப்பட்ட போது எனக்கு என்ன வயது என்றால் சுமார் 12 இருக்கும். அதனால் 1985ல் எனது சிறிய தாயார் கிரையம் வாங்கிய சொத்து எப்படி வாங்கப்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் என் உறவினர்கள் மூலமாக நான் கேள்விப்பட்டதை சொல்கிறேன். 3ம் இலக்கச் சொத்தானது 2ம் பிரதிவாதியான எனது சகோதரரால் அவரது சுய சம்பாத்தியத்தின் பேரில் வாங்கப்பட்டச் சொத்து என்று சொன்னால் இல்லை, அப்போது அவர் கல்லூரி படித்தார்.

5. கடந்த 2003ம் ஆண்டு மணிகண்டன் எந்த ஊரில் இருந்தார், என்ன படித்துக்கொண்டிருந்தார், என்ன வேலை பார்த்துக்கொண்டிருந்தார் மற்றும் எந்த கல்லூரியில் படித்துக்கொண்டிருந்தார் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் பொறியியல் கல்லூரியில் படித்தார், மற்ற விபரம் எனக்குத் தெரியாது. ஆனால் சிவகங்கையில் படிக்கவில்லை. அவருக்கும் எனக்கும் பிறந்ததிலிருந்தே பேச்சு வார்த்தை இல்லை என்றால் சரியல்ல. எனது அப்பாவின் அப்பா சிங்கப்பூரில் வட்டிக்கடை வைத்திருந்தார் என்றால் சரிதான். அவர் வட்டிக் கடை வைத்திருந்ததற்கான ஆதாரம் எதுவும் என்வசம் உள்ளதா என்றால் இல்லை. என் அப்பாவின் அப்பா சிங்கப்பூரில் வட்டிக்கடை வைத்திருந்த விபரத்தை எனது நிரூபணவாக்குமூலத்திலோ அல்லது பிராதிலோ

சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை, அதற்கான அவசியம் இல்லை என்பதால் சொல்லவில்லை.

6. பொதுக்குடும்ப வருமானத்திலிருந்து கிரையம் பெறப்பட்டது என்பதை காண்பிப்பதற்கு ஆதரவாக ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது குடும்பத்தில் எனது தாத்தாவின் வட்டிக்கடை தவிர வேறு எதுவும் எனது குடும்பத்திற்கு தொழிலோ அல்லது கடையோ நிறுவனங்களோ, வணிக அமைப்புகளோ எதுவும் இருந்தனவா என்றால் எனது அப்பாவின் அம்மாவிற்கு பூர்வீக சொத்திலிருந்து ஏராளமான வருமானம் வாடகையிலிருந்து வந்தது. இது எனக்கு சிறுவயதிலிருந்தே தெரியும். நான் மேலே கூறியுள்ள விபரங்களை என் பிராதில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. எனது நிரூபணவாக்குமூலத்தில் எதுவும் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. எனது பிராதில் எனது தாயார் மீனாட்சி ஆச்சி இறந்த பிறகு ஒரு யாதாஸ்து எனது தகப்பனார் மற்றும் தாய் வழி தாத்தா மற்றும் இருவீட்டார் உறவினர்கள் முன்னிலையில் எழுதியதாக சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் அந்த யாதாஸ்து என்றால் சரிதான். **(அது பி.வா.சா.ஆ,1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

7. அந்த யாதாஸ்துவில் பூர்வீக சொத்து குறித்து குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. வாடகை வருமானம் குறித்து யாதாஸ்துவில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. தாவா 3 இலக்கச் சொத்துக்களும் பொதுக்குடும்ப வருமானத்தில் இருந்து கிரையம் பெறப்பட்டதாக பிராதில் சொல்லியுள்ளது அப்பட்டமான பொய் என்றாலும். அவை பூர்வீக சொத்துக்களே அல்ல என்று சொன்னாலும் சரியல்ல. தாவா 3 இலக்கச் சொத்துக்களும் பூர்வீக சொத்துக்கள் என்பதாகவோ, பொதுக்குடும்ப வருமானத்திலிருந்து கிரையம் பெறப்பட்டது என்பதற்கு ஆதரவாகவோ என்னால் ஒரு சிறு ஆதரவுகூட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்று சொன்னால் தாக்கல் செய்யவில்லை. என் அப்பாவின் அப்பா மெய்யப்பன் (எ) சொக்கலிங்கம் செட்டியார் சுமார் 1960 ம் ஆண்டு வாக்கில் இறந்துபோனார் என்றால் சரிதான். என் தந்தையின் தாயார் நாச்சம்மை (எ) சௌந்தரம் ஆச்சி எந்த ஆண்டு இறந்தார் என்றால் 1976 ம் ஆண்டு இறந்தார்.

8. எனது தாயார் நான் பிறந்த தேதியன்றே 1972ம் ஆண்டு இறந்துவிட்டார் என்றால் சரிதான். 1976ம் ஆண்டு 3ம் பிரதிவாதியை 1ம் பிரதிவாதி திருமணம் செய்துவிட்டார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியின் தந்தைவழி தாயார் மெய்யம்மை ஆச்சியிடமிருந்து 1ம் பிரதிவாதிக்கு கிடைத்ததால் 1ம் இலக்கச் சொத்து பூர்வீக சொத்து இல்லை என்றால் அந்த சொத்து எனது தகப்பனாரின் பாட்டி மெய்யம்மை ஆச்சி இறந்த பிறகு அவரது மகன் மெய்யப்பன் (எ) சொக்கலிங்கம் செட்டியாருக்கு கிடைக்கப்பெற்று அவர் 1960ல் இறந்த பின்பு அவரது மனைவியான சௌந்தரம் ஆச்சியாருக்கு கிடைக்கப்பெற்றது, அது எனது தந்தை சூவீகாரம் வருவதற்கு முன்பே நடந்துவிட்டது. அதனால் 1ம் இலக்கச் சொத்து பூர்வீக சொத்து அல்ல என்று சொன்னால் சரியல்ல.

9. அதேபோல் 2ம் இலக்கச் சொத்து தன்னுடைய பணத்தைக் கொண்டும், சீதனமாக வந்த தொகைகள் மற்றும் சிறுவாட்டு (சேமிப்பு) பணத்தைக் கொண்டும் 3ம் பிரதிவாதி விசாலாட்சி தனது சுய சம்பாத்தியத்தியத்தைக் கொண்டு தாவா 2ம் இலக்கச் சொத்தை கிரையம் வாங்கினார் என்று சொன்னால் சரியல்ல. 3ம் பிரதிவாதி சிவகங்கையில் ஜவுளிக்கடை நடத்திவந்தார் என்றால் சரிதான். எனக்கும் 1, 2, 3, 4 பிரதிவாதிகள் அடங்கிய குடும்பத்திற்கும் சுமார் 40 ஆண்டுகளாக எந்தவித தொடர்பும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல, தவறு. பி.வா.சா.ஆ.1 ல் குறிப்பிட்டபடி என்னை வளர்த்தது, படிக்கவைத்தது எல்லாமே எனது தாய் வழித் தந்தை என்று சொன்னால் சரியல்ல, தவறு. நான் இருவீட்டார் பராமரிப்பில் தான் இருந்தேன்.

10. எனது திருமணத்திற்கு என் தந்தையை அழைக்காமலே எனது திருமணம் நடந்தது என்றால் என் தந்தையை அழைத்தோம் ஆனால் அவர் வரவில்லை, அதனால் அவர் இல்லாமல் எனது திருமணம் நடந்தது. இந்த வழக்கிற்காக நான் உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நானும், 4ம் பிரதிவாதியும் எந்தவொரு சொத்திலும் பாகம்கோர இயலாது என்று சொன்னால் நான் 4ம் பிரதிவாதிக்காக பதில் சொல்ல இயலாது. என்னை பொறுத்து பாகம் கோர இயலாது என்று சொன்னால் சரியல்ல. தாவா 1ம் இலக்கச் சொத்தில் ஒரு பகுதியை கடந்த 30.04.2010ல் எனது தகப்பனார் முத்துராமன் செட்டியாரால் (1ம் பிரதிவாதி) காரைக்குடி மெய்யப்பன் என்பவருக்கு கிரையம் செய்து கொடுத்த விபரம் தெரியுமா என்றால் கிரையம் செய்து

கொடுக்கவில்லை, முன் ஒப்பந்தம் செய்து கொண்டார்கள் இது குறித்து எனக்கு விபரம் தெரிந்தவுடன் மெய்யப்பன் தான் பெற்ற முன்தொகையினை திரும்பக் கொடுத்துவிட்டார்.

11.நாங்கள் கூட்டு அனுபவத்தில் இருப்பதாக பிராதில் சொல்லியுள்ளதற்கு ஆதரவாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிராது 3 இலக்கச் சொத்துகளிலும் எந்த காலத்திலும் எனக்கு கூட்டு அனுபவம் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. கடந்த 30.04.2010 அன்று தாவா 1ம் இலக்கச் சொத்தான காரைக்குடியில் உள்ள வீட்டின் ஒரு பகுதியினை 1ம் பிரதிவாதி 3ம் தரப்பினருக்கு பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணத்தின்மூலம் கிரையம் செய்து கொடுத்துவிட்டார் என்றால் எனக்குத் தெரியாது. தாவா சொத்துக்களில் கூட்டு அனுபவத்தில் நான் இல்லாத காரணத்தினால் நான் செலுத்தியுள்ள நீதிமன்ற முத்திரைக் கட்டணம் தவறானது என்று சொன்னால் சரியல்ல. 3 இலக்கச் சொத்துக்களுக்கும் யார் வரி கட்டுகிறார்கள் என்றால் என் தந்தை வரி கட்டுகிறார். 3 இலக்கச் சொத்துக்களுக்கும் மின் கட்டணம், குடிநீர் வரி யார் கட்டுகிறார்கள் என்றால் என் தகப்பனார் கட்டி வருகிறார்.

12. மேற்கண்ட 1ம் இலக்கச் சொத்தில் விற்றது போக மீதி பங்கை அவரது மனைவி 3ம் பிரதிவாதி விசாலாட்சி ஆச்சிக்கு 1ம் பிரதிவாதி இனாம் செட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்தார் என்றால் தவறு, அவர் முழு சொத்தையும் மணிகண்டன் என்பவருக்கு இனாம் செட்டில்மென்ட் எழுதிக் கொடுத்து மணிகண்டன் தன் தாயாருக்கு பவர் எழுதிக் கொடுத்துவிட்டார். அதனால் 3 இலக்கச் சொத்துக்களும் அவரவர் தனித்த அனுபவத்தில் உள்ளது என்றும் எந்த சொத்துக்களும் கூட்டு அனுபவத்தில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த இனாம் செட்டில்மெண்ட் இரத்தாகிவிட்டது என்று சொன்னால்அதுபற்றி எனக்குத் தெரியாது. தாவா 1ம் இலக்கச் சொத்தான காரைக்குடி வீட்டின் ஒரு பகுதியை 3ம் நபருக்கு விற்று விட்டு மீத பகுதியை 1ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதிக்கு இனாம் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக் கொடுத்துவிட்டார் என்ற விபரம் எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது.

13.வழக்கு தாக்கல் செய்ய பிராதில் உள்ள விபரங்கள் யார் என் வழக்கறிஞரின் கூறினார்கள் என்றால் நான்தான் கூறினேன். பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை நான் படித்து பார்த்தேனா என்றால் நான் படித்துப் பார்த்தேன். நான்

பிராதில் சொல்லியுள்ளது போல் எங்கள் குடுமபத்திற்கு பூர்வீக சொத்துக்கள் எதுவும் கிடையாது என்றால் சரியல்ல. ஆண் வழியில் தான் பூர்வீக சொத்துக்கள் வருமே தவிர பெண் வழியில் பூர்வீக சொத்துக்கள் வராது என்றால் சரியல்ல. 1ம் இலக்கச் சொத்து 1ம் பிரதிவாதியின் பாட்டியின் வழியில் வந்த சொத்து என்பதால் பூர்வீக சொத்து இல்லை என்றால் சரியல்ல. சரியான முத்திரைக் கட்டணம் செலுத்தப்படாததால் வழக்கு நிலைநிற்கத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.

14. பி.வா.சா.ஆ.1 யாதாஸ்து படி நான் சொத்துக்களை அடைந்துவிட்டேன் என்றாலும். என் தந்தையின் மீது உள்ள காழ்ப்புணர்ச்சி காரணமாக வழக்குத் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எந்தவொரு சொத்திலும் எந்தவொரு பாகமும் எனக்குத் கிடைக்கத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.

(1, 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணையை 4ம் பிரதிவாதி தரப்பு ஏற்றுக்கொள்கிறார்)

**மறுவிசாரணை: இல்லை**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்)– திருமதி.P.கலை நிலா, M.L.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.